# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **Case No.490/2014** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **P.W**.6.பாபுகாந்தி |
| **Father's Name** | : | ராமச்சந்திரன் |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22.11.2021

மு.வி:

நான் தற்போது காடுபட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.06.2013 ஆம் தேதி செக்கானூரணி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்தபோது அதிகாலை 3 மணி அளவில் இரவு ரோந்து பணியிலில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் அவர்களுடன் ரோந்து சென்றபோது செக்கானூரணியில் உள்ள தேவர்சிலை அருகே வாகனத்தணிக்கை செய்தபோது அந்த வழியாக வந்த ஆட்டோவை நிறுத்தி சோதனை செய்தபோது பண்ணியானை சேர்ந்த ரவி என்பவர் மேற்படி ஆட்டோவை ஓட்டி வந்தார். அந்த ஆட்டோவை சோதனை செய்தபோது 4 அட்டை பெட்டியுடன் 192 எக்ஸ்பிரஸ் மதுபான பாட்டில்கள் காணப்பட்டது. கண்ணனூர் கிராமத்தை சேர்ந்த ராமன் மகன் சின்னன் என்பவர் திருட்டுதனமாக மேற்படி பாட்டில்களை கொண்டு வந்ததாக ஓட்டுநர் ரவி சொன்னார். உடனடியாக ஓட்டுநர் ரவி மற்றும் ஆட்டோவை செக்கானூரணி காவல் நிலையம் கொண்டு வந்து ஓட்டுநர் ரவி கொடுத்த தகவலின் அடிப்படையில் ராமன் மகன் சின்னன் என்பவரை அவரது வீட்டில் வைத்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர்கள் முன்னிலையில் சோதனை செய்தபோது அவரது வீட்டில் மதுபாட்டில்கள் இருந்தது. அதன்பிறகு வேறு எங்கும் அவரை சார்பு ஆய்வாளரை அழைத்து சென்று மதுபாட்டில்கள் உட்பட மற்ற பொருட்கள் எதுவும் எடுத்து கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆட்டோவில் கொண்டு வந்த மதுபாட்டில்களை அத்தாட்சி தயார்செய்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். அதில் நானும்

தலைமை காவலர் பழனிச்சாமி என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

கு.வி:

நான் முதல் விசாரணையில் சின்னன் வீட்டிற்கு சென்று அவரது வீட்டில் மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டுள்ளது குறித்து ஆய்வாளர் விசாரிக்கும்போது நான் சொன்னேனா என்றால் நான் சொன்னேன். இரவு ரோந்து சென்றபோது ரவி ஓட்டிவந்த ஆட்டோவின் பதிவு எண் தெரியுமா என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. செக்கானூரணி தேவர் சிலையும் செக்கானூரணி காவல் நிலையமும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். ஆட்டோவை சோதனை செய்தபோது ஓட்டுநர் ரவியை தவிர 4 நபர்கள் ஆட்டோவில் இருந்தார்கள். அவர்கள் பெயர்கள் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி விபரத்தை நான் ஆய்வாளர் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொன்னேன். இந்த வழக்கை பதிவுசெய்த சார்பு ஆய்வாளர் மற்றும் புலன் விசாரணை செய்த ஆய்வாளர் எனது மேல் அதிகாரிகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சிகள் பழனிச்சாமி, பாஸ்கரன், மாயக்கண்ணன் ஆகியோர்கள் என்னுடன் பணிபுரிந்த காவலர்கள் என்றால் சரிதான். சம்பவ தினத்தில் வாகனத் தணிக்கையின்போது இந்த வழக்கை தவிர வேறு வழக்கு வேறு நபர்கள் மீது பதிவுசெய்யப்பட்டதா என்றால் இல்லை. நான், தலைமை காவலர், சார்பு ஆய்வாளர் ஆகியோர்கள் ரோந்து பணிக்கு சென்றபோது பொதுநாட்குறிப்பில் எழுதப்பட்டதா என்றால் எழுதப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த இடம் அதிகம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சம்பவ சமயத்தில் அதிகாலை நேரம் என்பதால் ஆட்கள் நடமாட்டம் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் இந்த வழக்கு பதிவுசெய்த சார்பு ஆய்வாளர் அவர்களும் புலன் விசாரணை செய்த ஆய்வாளரும் எனக்கு மேல் அதிகாரி என்பதால் எதிரிகள் மீது கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன இடத்தில் வைத்து அத்தாட்சியில் எதையும் கைப்பற்றப்படவில்லை என்றும் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

ம.வி:

இல்லை.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **Case No.490/2014** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **P.W**.7.சின்னன் |
| **Father's Name** | : | சின்னன் |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22.11.2021

மு.வி:

நான் கிராம உதவியாளராக பணிபுரிந்து 2014 ஆம் வருடம் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். அ.சா.3 சேதுராமன் கிராம நிர்வாக அலுவலர் ஆவார். நான் ஏ.கொக்குளம் கிராம உதவியாளராக பணிபுரிந்தபோது செக்கானூரணி தேவர் சிலை அருகே போலீசார் பிராந்தி பாட்டில்களை பிடித்து வைத்திருந்ததை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். யாரிடமிருந்து கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி அத்தாட்சியில் நானும் கிராம நிர்வாக அலுவலர் சேதுராமன் என்பவரும் கையெழுத்து செய்தோம். என் முன்னிலையில் யாரையாவது விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது, யாராவது போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் இரண்டு மற்றும் அத்தாட்சி ஒன்று ஆகியவற்றில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். அவைகள் முறையே **அ.சா.ஆ.8, 9, 10.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)**

16.06.2013 ஆம் தேதி செக்கானூரணி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் இவ்வழக்கில் 4வது எதிரி ரவி அவர்களை செக்கானூரணி தேவர் சிலை அருகே கைது செய்து விசாரணை செய்தபோது அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை

என் முன்னிலையிலும் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையிலும் சார்பு ஆய்வாளர் பதிவுசெய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காலை 6.30 மணிக்கு பன்னியான் சிந்து வைரல் அருகில் கண்மாய் மதகுக்கு அடியில் இவ்வழக்கின் சொத்துக்களை என் முன்னிலையிலும் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையிலும் சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. பிறகு இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி வயக்காட்டுசாமி 01.07.2013 ஆம் தேதி காலை 10 மணிக்கு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையிலும் பதிவுசெய்து எங்களிடம் சாட்சி கையெழுத்து பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிகளுக்கு பயந்து நான் செய்த கையெழுத்துக்கள் மற்றும் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலங்கள் ஆகியவற்றை மறைத்து அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி:

இல்லை.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **Case No.490/2014** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **P.W.8.ரவி** |
| **Father's Name** | : | **கோவிந்தராஜ்** |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22.11.2021

மு.வி:

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் நக்சல் தடுப்பு சிறப்பு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.06.2013 ஆம் தேதி செக்கானூரணி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது அதிகாலை சுமார் 3 மணி அளவில் தேவர் சிலை அருகில் போலீஸ் பார்டியுடன் வாகன தணிக்கையில் இருந்தபோது டி.என்.58 எம்.5432 என்ற எண்ணுள்ள ஆட்டோவை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் இருந்த எதிரிகள் ரவி, சின்னன் ஆகியோர்களிடமிருந்து 4 அட்டை பெட்டிகளில் எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில்கள் 192 மற்றும் ஆட்டோவை போலீஸ் அத்தாட்சியில் தலைமை காவலர் பழனிச்சாமி, தலைமை காவலர் பாபு காந்தி ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றினேன். அப்போது மேற்படி சந்தேக எதிரி ரவி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரிகள் வயக்காட்டுசாமி, நாகராஜ், முருகன் ஆகியோர்கள் பன்னியான் சிங் வயல் அருகில் உள்ள கண்மாய் மதகு கண்ணில் மறைத்து வைத்திருந்த மேலும் சொத்து வழக்குகளை கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியார் ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றி எதிரிகளுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.242-13, 4(1)(a) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டம் 41(2) மற்றும் 102ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். முதல் தகவல்

அறிக்கை **அ.சா.ஆ.11.** எதிரி ரவி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.12.** ரவி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில்கள் 1167, 100 எம்.எல். பாராசூட் தேங்காய் எண்ணெய் 2880 பாட்டில்கள், ரின் ஒயிட் 200 எம்.எல். 64 பாட்டில்கள், 500 எம்.எல். டோமெக்ஸ் 14 பாட்டில்கள் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டது. மேற்படி அத்தாட்சி **அ.சா.ஆ.13.** அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு ஒப்படைத்தேன். 192 பிராந்தி பாட்டில்கள் மற்றும் ஆட்டோ சம்மந்தப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.14.** 192 பிராந்தி பாட்டில்கள் **சா.பொ.1.** பதிவு எண்.டிஎன்.58 எம்.5432 எண்ணுள்ள ஆட்டோ **சா.பொ.2.** 1167 பிராந்தி பாட்டில்கள், 2880 தேங்காய் எண்ணெய் பாட்டில்கள், 64 ரின் ஒயிட் பாட்டில்கள், 14 டோமெக்ஸ் பாட்டில்கள் சம்மந்தப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.15.** 1167 பிராந்தி பாட்டில்கள் **சா.பொ.3.** 2880 தேங்காய் எண்ணெய் பாட்டில்கள் **சா.பொ.4. 64 ரி**ன் ஒயிட் பாட்டில்கள் **சா.பொ.5.** 14 டேமெக்ஸ் பாட்டில்கள் **சா.பொ.6.** அன்னைய தினமே எதிரிகள் ரவி மற்றும் சின்னன் ஆகியோர்களை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

கு.வி:

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்ததும் புகார்தாரரும் முதல் விசாரணை செய்ததும் நான் தான் என்றால் சரிதான். இந்த வழக்கில் பொதுமக்களை சாட்சியாக விசாரணை செய்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்த பழனிச்சாமி, பாபு காந்தி எனக்கு கீழ் பணிபுரியும் காவலர்கள் என்றால் சரிதான். நான் ரோந்து பணிக்கு சென்ற விபரத்தை பொது நாட்குறிப்பில் பதிவுசெய்துள்ளேன் என்றால் சரிதான். வாகன தணிக்கை செய்த இடம் காவல் நிலையம் அருகில் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக அந்த இடம் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் பகல் நேரத்தில் மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும். நான் வாகன தணிக்கை செய்தபோது எதிரிகள் வயக்காட்டுசாமி, நாகராஜ், முருகன், செல்வம் ஆகியோர்கள் ஆட்டோவில் இல்லை என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எதிரி ரவி பொருட்களை திருடிக்கொண்டு வந்ததாக வாசகம் இடம் பெறவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமான பொருட்களை மற்ற எதிரிகள் திருடிக்கொண்டு வந்து எதிரி ரவியிடம் கொடுத்ததாக முதல் தகவல் அறிக்கையில் வாசகம் இடம் பெறவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தபோது 1167 பாட்டில்கள் கைப்பற்றப்பட்ட நிலையில் அதற்கான வழக்கின் சட்டப்பிரிவை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் அளவு தெரியாத காரணத்தினால் பதிவுசெய்யவில்லை. முதல் தகவல் அறிக்கையில் 1167 பாட்டில்கள் கைப்பற்றப்பட்டன என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வாகன தணிக்கை செய்தபோது இந்த வழக்கை தவிர வேறு வழக்குகள் வேறு எதிரிகள் மீது பதிவுசெய்யப்பட்டதா என்றால் இல்லை. ரவி என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம்

கொடுக்கவில்லை என்றும் நான் அவரை வற்புறுத்தி ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் ரவி மற்றும் சின்னனை கைதுசெய்யவில்லை என்றும் விசாரணை என்ற பெயரில் காவல் நிலையம் அழைத்து கைதுசெய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்துக்களை நான் ரவியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றும் நானாக உற்பத்தி செய்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவுசெய்யப்பட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சரிவர முதல் விசாரணை செய்யாமல் வழக்கு கோப்பை ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்செய்யவில்லை என்றால் சரிதான்.

ம.வி:

இல்லை.